**Deposition of Witness**
**(Chapter XXIII Code of Criminal Procedure )**
**In the Court of Judicial Magistrate, No.III, Cuddalore.**

| | |
|---|---|
| Case Number | : C.C.No. 166/2023 |
| Police Station | : DCB- Landgrabbing P.S. |
| Deposition of witness for Prosecution | : P.W.1 - Cross |
| Name | : ரவிச்சந்திரன் |
| Father Name/Husband Name | : பெருமாள் |
| Village | : |
| Cuddalore | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 விதிமுறைகளின் படி01.04.2025 நாளாகிய இன்று திருமதி.L.Vanaja, B.A., B.L., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

2 ம் எதிரி ஆஜர். 3 முதல் 6 வரையிலான எதிரிகள் ஆஜர். இல்லை. கு.வி.மு.ச.317ன் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

அ.சா.1 சாட்சி ஏற்கனவே 25.02.2025 அன்று முதல் விசாரணை செய்யப்பட்டு எதிரிகள் தரப்பில் Defered Petition போடப்பட்டு அம்மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி முன்னிலையானதின் பேரில்

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**01.** நான் வழக்கறிஞராக பணியாற்றி வருகிறேன். கடந்த 08.08.2014 அன்று காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்தேன். 19.09.2014 அன்று தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். கௌசல்யா உங்கள் அம்மா என்றால் சரிதான். அவர்கள் தான் மனையினை மனைப்பிரிவாக பிரித்து விற்பனை செய்தார்கள் என்றால் சரிதான். கௌசல்யா நகரில் மொத்தம் எத்தனை மனைப்பிரிவுகள் உள்ளது என்றால் 22 மனைப்பிரிவுகள் உள்ளது. 22 மனைப்பிரிவுகள் போகத்தான் சமூகநலக்கூடம் கௌசல்யா நகரில் உள்ளது. என் அம்மாவிற்கு 2 மகன்கள். ஒன்று நான் மற்றொருவர் சேகர் எனது அண்ணன். அவர் இறந்துவிட்டார். எனது அம்மா 29.09.2013ல் இறந்தார்.

**02.** உங்கள் அம்மாவின் வாரிசு சான்றிதழ் கோரி தாக்கல் செய்துள்ள விண்ணப்பத்தில் விடுநர் என்ற முகவரியில் என்னுடைய பெயர் மற்றும் விலாசம் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் என் அம்மாவின் வாரிசு சான்றிதழ் கோரிய மனுவில் என் அண்ணனின் மனைவியை வாரிசாக சேர்க்கவில்லை என்றால் அதுப்பற்றி எனக்கு

ஞாபகமில்லை. என் அண்ணனின் மனைவி என் அம்மாவிற்கு நேரிடையான வாரிசாக முடியாது. இவ்வழக்கின் 6-வது எதிரி வெங்கடராமகிருஷ்ணன் என்பவர் எனக்கு உறவினர் அல்ல. மற்ற எதிரிகளுக்கும் உறவினர் அல்ல. எந்த ஆவணத்தின் அடிப்படையில் நீங்கள் புகார் கொடுத்தீர்கள் என்றால் ஆவண எண்.24/2014 தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 தான் அந்த தான செட்டில்மெண்ட் பத்திரம் என்றால் சரிதான். அதுதான் அந்த போலியான பத்திரம்.

**03.** நான் வழக்கறிஞராக பணி செய்து வருவதால் உரிமையியல் வழக்கு வரும்போது ஆவணங்களை பார்த்து அதன் அடிப்படையில் தான் வழக்கு தொடர்வேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2ல், 5-ல் நான்குபாக பாத்தியதை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அந்த ஆவணம் அடிப்படையிலேயே பொய்யான ஆவணம் ஆகும். தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுக்கும்போது அதன் பயனாளரின் ஒப்புதல் வேண்டுமா என்றால் அதுப்பற்றி கேட்கவேண்டிய அவசியம் இல்லை. ராஜேஸ்வரிக்கு தெரிந்து தான் தானசெட்டில்மெண்ட் எழுதி வைக்கப்பட்டது.

**04.** தாய் பத்திரம் தொலைந்துவிட்டால் எவ்வாறு பத்திர பதிவு செய்ய முடியும் என்றால் பத்திரம் காணமால் போனது என்று புகார் கொடுக்கப்படும். ஆனால் இவ்வழக்கை பொறுத்தவரை சிவக்குமாரிடம் தாய் பத்திரமே இல்லை. ஏனென்றால் என் அம்மா இருக்கும்போதே அந்த தாய் பத்திரம் தொலைந்துவிட்டது. அதனால் என் அம்மா 2011ல் பத்திரப் பதிவு அலுவலகத்தில் copy application வாங்கியுள்ளார். அ.சா.ஆ.2 ல் 5 வாரிசுகளில் 4 வாரிசுகள் தங்களுக்குள் பாகத்தை பிரித்துக்கொண்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அந்த தானசெட்டில்மெண்டே அடிப்படையிலேயே தவறான ஒன்று. அதை நான் மறுக்கிறேன். 5 வாரிசுகள் என்று மேற்கண்ட ஆவணத்தில் குறிப்பிடப்பட்டு முறையாகத்தான் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த ஆவணம் அடிப்படையிலேயே போலியானது. தவறானது.

**05.** அந்த அவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள வாரிசு சான்றிதழில் எனது பெயர் நீக்கம் செய்யப்பட்டு என் அண்ணன் மகன்கள் 4 பேர் மட்டும் வாரிசுகள் என்று தயார் செய்யப்பட்டுள்ளது. 2019ம் ஆண்டு 1முதல் 5 எதிரிகளிடமிருந்து கௌசல்யா நகரில் உள்ள

சமூகநலக்கூடத்தை கிரயம் வாங்கினீர்கள் என்றால் சரிதான். சமூகநலக்கூடத்தை கிரயம் வாங்கிய நீங்கள் போலியாக வாரிசு ஆவணத்தை தயார் செய்துள்ளீர்கள் என்றால் இல்லை. மேற்கண்ட இடம் நாங்கள் விற்க கூடிய இடம் தான். அது எங்களுடைய சொத்து. நகராட்சிக்கு நாங்கள் கொடை ஆவணம் எழுதிக்கொடுத்தோம். ஆனால் அதில் இந்த சமூகநலக்கூடம் வராது. தானசெட்டில்மெண்ட் குறித்து நாங்கள் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் பேராணை மனு தாக்கல் செய்து அது Wr.OP.No.9809/2015 பதிவு செய்யப்பட்டு பதிவு துறைக்கு சென்று உரிய நிவாரணம் செய்துக்கொள்ளுமாறும் உரிமையியல் நீதிமன்றத்தை அனுகுமாறும் கூறி முடிக்கப்பட்டது. இவ்வழக்கில் வாரிசு சான்றிதழ் போலியாக நீங்கள் தான் தயார் செய்துள்ளீர்கள், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் கூட்டுசதி செய்து என் சொத்தை அடைய வேண்டும் என்று தானசெட்டில்மெண்ட் போலியாக தயார் செய்துள்ளார்கள்.

Taken down by me in the presence of Accused, and read over to the witness and admitted by her/him to be correct.

(S/d. L.Vanaja, B.A.,B.L.,)
Judicial Magistrate No.III
Cuddalore.

**Deposition of Witness**
**(Chapter XXIII Code of Criminal Procedure )**
**In the Court of Judicial Magistrate, No.III, Cuddalore.**

| | |
|---|---|
| Case Number | : C.C.No. 166/2023 |
| Police Station | : DCB- Landgrabbing P.S. |
| Deposition of witness for Prosecution | : L.W.2 /P.W.2 |
| Name | : சம்பத் |
| Father Name/Husband Name | : ராஜகாந்தம் |
| Village | : |
| Cuddalore | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 விதிமுறைகளின் படி 01.04.2025 நாளாகிய இன்று திருமதி.L.Vanaja, B.A., B.L., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

2 ம் எதிரி ஆஜர். 3 முதல் 6 வரையிலான எதிரிகள் ஆஜர். இல்லை. கு.வி.மு.ச.317ன் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

**01.** நான் தற்போது கடவாச்சேரியில் வசித்து வருகிறேன். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1ஐ எனக்கு தெரியும். அ.சா.1க்கும் அவரது அண்ணன் மகன்களுக்கும் சொத்து பிரச்சனை இருக்கிறது. கடந்த 29.09.2013 அன்று ரவிச்சந்திரன் என்பவரின் அம்மா இறந்துவிட்டதாக எனக்கு தகவல் வந்தது. நான் இறப்பிற்கு சென்றேன். எனது நண்பர் அ.சா.1 ரவிச்சந்திரன் அவர்களின் பெயரை நீக்கி அவரின் அண்ணன் மனைவி ராஜேஸ்வரி வாரிசு சான்றிதழ் போலியாக தயார் செய்ததாக ரவிச்சந்திரன் என்னிடம் சொன்னார். ரவிச்சந்திரனின் சொத்தை அபகரிப்பதற்காக கார்த்தி, சிவக்குமார், ராமச்சந்திரன், கேசவமூர்த்தி, வெங்கட்ராமகிருஷ்ணன் ஆகியோர்கள் சேர்ந்து கௌசல்யா நகரில் இருக்கும் 22வது மனையின் பத்திரம் காணவில்லை என்று புதுநகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து missing certificate வாங்கி அதை வைத்து எதிரிகள் நால்வரும் அவரது அம்மாவான ராஜேஸ்வரியின் பெயரில் தான செட்டில்மெண்ட் பத்திரத்தை தயார் செய்தார்கள்.

**02.** பின்னர் அந்த சொத்து தொடர்பாக பட்டா மாற்றம் செய்து கார்த்தி, சிவக்குமார், ராமச்சந்திரன், கேசவமூர்த்தி, வெங்கட்ராமகிருஷ்ணன் ஆகியோர்கள் கூட்டு சதி செய்து அ.சா.1ன் பங்கையும் சேர்த்து அதை விற்பதற்கு முயற்சி செய்ததாக அ.சா.1 என்னிடம் கூறினார். 19.09.2013 அன்று இது சம்மந்தமாக புகார் கொடுக்க நானும், அ.சா.1 உடன் கடலூர் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு சென்றேன். பின்னர் நிலஅபகரிப்பு பிரிவு காவல் அதிகாரிகள் விசாரித்ததில் நான் நடந்ததை சொன்னேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**03.** நான் ரியல் எஸ்டேட் வேலை செய்து வருகிறேன். சிதம்பரம் கடவாச்சேரியில் வசித்து வருகிறேன். நீங்கள் சிதம்பரம் பகுதியில் தான் ரியல் எஸ்டேட் செய்வீர்கள் என்றால் இல்லை. கடலூர், பாண்டிச்சேரி பகுதியிலும் செய்வேன். அ.சா.1 எப்படி பழக்கம் என்றால் அவர் நீண்ட நாள் நண்பர். கௌசல்யாவிற்கு நிறைய சொத்து உள்ளது என்று எனக்கு தெரியும். ஆனால் எங்கெங்கு உள்ளது என்று கௌசல்யா நகர் மனைப்பிரிவை தவிர மற்ற சொத்துக்கள் பற்றி தெரியாது.

**04.** சேகர் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. கௌசல்யா என்பவரின் இறப்பிற்கு வரும்போது ரவிச்சந்திரன் மற்றும் எதிரிகள் ஒன்றாக இருந்தார்களா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. கௌசல்யாவிற்கு யார் கொள்ளி போட்டது என்றால் நான் சுடுகாட்டிற்கு செல்லவில்லை. அதனால் எனக்கு தெரியாது. தாய் பத்திரம் தொலைந்துவிட்டால் missing certificate வாங்கிதான் பதிவு செய்யவேண்டும் என்றால் இந்த வழக்கில் போலியாக அவ்வாறு missing certificate பெறப்பட்டுள்ளது. missing certificate சம்மந்தமாக புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை. தானசெட்டில்மெண்ட் கொடுப்பதற்கு முன்பாக பயன்பெறுபவரின் சம்மதம் கேட்கப்படுமா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

**05.** வாரிசு சான்றிதழ் கோரி யார் மனு செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. வெங்கடராமகிருஷ்ணன் எதிரிகளுக்கு உறவினர் இல்லை. 19.09.2013 அன்று போலிசார் என்னை விசாரித்தார்கள். அப்போது என்னுடன் அ.சா.1 இருந்தார். அ.சா.1 உங்கள் நண்பர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் இல்லை. இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், அ.சா.1 கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் இல்லை. நீங்கள் நீதிமன்றத்திற்கு ஆஜராகி அதற்கு பின்னர் தான் சாட்சிகள் அழைப்பாணையில் கையெழுத்து போட்டு பெற்றுக்கொண்டீர்கள் என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், அ.சா.1 கொடுத்த பொய்யான புகாருக்கு அனுசரணையாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றாலும் சரியல்ல.

Taken down by me in the presence of Accused, and read over to the witness and admitted by her/him to be correct.

(S/d. L.Vanaja, B.A.,B.L.,)
Judicial Magistrate No.III
Cuddalore.